# முனைவர் அ. சுகந்தி அன்னத்தாயின் "நாட்டுப்புறச் சிறார் வழக்காறுகளில்" சிறார் உளவியல்

9

**திருமதி பொ. விஜயராணி**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி,**

**குரோம்பேட்டை, சென்னை -44.**

ponviji29@gmail.com

**ஆய்வு நோக்கம் :**

சிறார் வழக்காறுகள் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கிற்கு மட்டுமின்றி சிறார் உளவியலையும் உள்ளடக்கியது என்பதை ஆராய்வதே ஆய்வின் நோக்கமாக அமைகிறது .

**ஆய்வுச் சுருக்கம்**

முனைவர் சுகந்தி அன்னத்தாயின் நாட்டுப்புறச் சிறார் வழக்காறுகளில் சிறார் உளவியல் என்னும் இக்கட்டுரையில் குழந்தைகள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் பிறருடன் இணக்கமாகப் பழகவும், சமுதாயத்தில் ஏற்படும் இன்னல்களைக் கடந்து செல்லவும் வழிவகை செய்கிறது. ஆரோக்கியமான மச்சாரத்தை ஏற்படுத்தி சிந்தித்துச் செயலாற்றவும், உடல் வலிமையைப் பெறவும், மொழி ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும், ஒழுக்கம் உள்ளவர்களாகவும், புரிதல், சமத்துவம் போன்றவற்றைக் கற்றுக் கொள்ளும் கலைக்கூடமாகவும் அமைகிறது .

**முன்னுரை**

கிராமப்புற மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதில் நாட்டுப்புற இலக்கியங்கள் முன்னிலை வகிக்கின்றன. ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்ற வரிகளுக்கேற்ப விளையாட்டு, விடுகதை மூலம் சிறார் பெறும் மனமகிழ்வையும் மன மேம்பாட்டினையும் நாட்டுப்புறச் சிறார் வழக்காறுகளில்' விளக்குகிறார் முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய். இவர் எழுதிய ஐந்து நூல்களுள் ஒன்றாகிய நாட்டுப்புறச் சிறார் வழக்காறுகளில் விளையாட்டுப் பாடல்களையும் அவர்களின் வழக்காறுகளையும் கள ஆய்வு மூலம் திரட்டியுள்ளார், அத்தரவுகளோடு தமது சிறுவயது அனுபவத்தைப் பகிர்ந்துள்ளதாகவும் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு மாணவர்களுக்குப் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் கூறப்பட்டுள்ள சிறார் வழக்காறுகளை மையமாக வைத்துக் குழந்தைகளின் உளவியலை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதன்மைச் சொற்கள்

மங்கலம் - சிறப்பு

மச்சரம் - போட்டி

மாட்சி – நன்மை

**உளவியல் சொற்பொருள் விளக்கம்**

உள்ளத்தைப் பற்றி அறிவதால் உளவியல் என்றும், மனிதனின் மனநிலை பற்றிய கல்வி என்பதால் மனவியல் என்றும் அழைப்பர்.

முதன் முதலில் உளவியலை ஆன்மாவைப் பற்றிய அறிவியல் என்று வரையறுத்தனர், உளவியல் என்ற தமிழ்ச் சொல்லின் அடிப்படையான "சைக்காலஜி" (Psychoiogy) எனும் ஆங்கிலச் சொல்லின் மூலச் சொற்கள் "சைக்கி", "லோஜஸ்" எனும் கிரேக்கச் சொற்கள் ஆகும். "சைக்கி", என்றால் ஆன்மா அல்லது ஆவி என்று பொருள். "லோஜஸ்" என்றால் அறிவியல் அல்லது அறிவுத்துறை என்று பொருள். எனவே, இம்மூல கிரேக்கச் சொற்களினடிப்படையில் ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கில அகராதி உளவியலை மனித ஆன்மா அல்லது உள்ளத்து தன்மை, வினைகள், நிகழ்ச்சி பற்றிய ஒரு அறிவியல் என்று வரையறுக்கிறது,

"உள்ளத்தின் வாழ்க்கையைப் பற்றியதோர் அறிவியலே உளவியல்"[1] என்று வில்லியம் ஜேம்ஸ் கூறுகின்றார்,

உளவியலறிஞர் சிக்மண்ட்பிராய்ட் "குழந்தைப் பருவத்தின் அனுபவங்கள் குழந்தையின் பிற்கால நடவடிக்கைகளில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணும்"[2] என்கிறார்.

"குழந்தைகளின் 'மன சமூக வளர்ச்சி' பிறவிக் குணத்தால் தூண்டப்பட்டாலும் சமூக பண்பாட்டுச் சூழ்நிலைகளால் சீரமைக்கப்படுகிறது"[3] என்கிறார் **எரிக் எரிக்சன்.**

**குழவிப்பருவம்**

**" மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**

**நன்கலம் நன்மக்கட் பேறு ". (குறள் – 60)**

என்பதற்கேற்ப குழந்தையை விரும்பாதவர் குவலயத்தில் இல்லை, கள்ளமில்லா வெள்ளை உள்ளம் கொண்ட குழந்தைகளைக் காணும் போது கற்றவரும் மற்றவரும் களிக்கின்றனர். குழவிப் பருவத்தில் இருக்கக்கூடிய குழந்தைகள் அழுதல், சைகை செய்தல், சிரித்தல் போன்ற செயல்கள் மூலம் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். இவர்கள் பெரிதும் மற்றவர்களைச் சார்ந்திருக்கின்ற தன்மையுடையவர்களாகத் திகழ்கின்றனர். அன்புடன் தன்னை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் (love and Affection) என்னும் எதிர்பார்ப்பு உள்ளவர்களாகவும் இருப்பர். இத்தகைய மகிழ்ச்சி, அமைதி, உல்லாசம் போன்ற உணர்வுகள் பூர்த்தியடைய விளையாட்டுக்கள் துணையாக இருக்கின்றன.

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு

சாயுங்கிளியே சாய்ந்தாடு"[4]

என்ற பாடலைப் பாடி உறவின்முறையோர் விளையாடுவதன் மூலம் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு உணர்வும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. மேலும் குழந்தைகளின் பேச்சுத் திறனை வளர்க்கப் பெற்றோர்,

“நிலா நிலா ஓடி வா

நில்லாமல் ஓடி வா

மலை மீது ஏறி வா

மல்லிகைப் பூ கொண்டு வா”

என்ற எளிய சொற்களின் மூலம் சைகைமொழியோடு சேர்த்துத் திரும்பத் திரும்ப பாடலைப்பாடிக் காண்பித்துக் குழந்தையின் உடல் அசைவுகளையும் பேச்சாற்றலையும் வளர்க்கின்றனர்.

“யாரு தச்ச சட்டை இது எங்க தாத்தா தச்ச சட்டை”

என்ற பாடலைக் குழந்தைகளுக்குத் திரும்பத்திரும்பச் சொல்லப் பழக்குவதன் மூலம் குழந்தைகள் தங்கு தடையின்றிப் பேசக்கூடிய நாப்பயிற்சி அளிக்கப்படுவதாகச் சுட்டுகிறார் நூலாசிரியர்.

மேலும் குழந்தைகளின் உள்ளங்கையில் தங்களின் முழங்கையை வைத்து “பருப்புக் கட பருப்பு கட” என்று பாடலைப் பாடிக்கொண்டு இறுதியில் சோறு கொண்டு போகும் வழி எந்த வழி? இந்த வழி எனக் குழந்தையின் உள்ளங்கையிலிருந்து தோள்பட்டை வரை வழி தேடுவர். அப்போது அக்குழந்தை மகிழ்ச்சியில் திளைத்து உற்சாகத்துடன் காணப்படும். இத்தகைய விளையாட்டுகளை முன்பள்ளிப் பருவத்திலே ஆசிரியர் குழந்தைகளுடன் இணைந்து விளையாடும் பொழுது ஆசிரியர் மீதான பயம் குழந்தைகளிடம் குறைந்து நெருங்கி உறவாட விளையாட்டுகள் துணைபுரிகின்றன.

**சிறார் பருவம்**

குழந்தைப் பருவத்தைக் கடந்த சிறுவர்கள் தமது மனக்கிளர்ச்சியைப் பகிர்வதற்குத் தமது வயதை ஒத்த சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுவதை விரும்புவர். இவர்கள் தங்கள் உணர்வுகளான அழுகை, உடலில் ஏற்படும் காயங்கள், களைப்படைதல் போன்ற செயல்களைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களாகக் காணப்படுவர். விளையாடும் போது கீழே விழுதல் அடிபடுதல் இரத்தம் வருதல் போன்ற செயல்கள் ஏற்படினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் விளையாட்டின் மீது கவனத்தைச் செலுத்துவர்.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு” (குறள்-423)

என்ற குறளுக்கு ஏற்ப ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்பும் குழந்தைகள் பிற்காலத்தில் அறிஞர்களாகவோ விஞ்ஞானியாகவோ ஆவார்கள் என்பர். அத்தகைய வினா அமைப்புடைய பாடல்களைச் சிறுவர்கள் பாடுவதாக இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

“கொழுக்கட்டை கொழுக்கட்டை ஏன் வேகல?

அடுப்பு எரியல நான் வேகல

அடுப்பே அடுப்பே ஏன் எரியல?

மழைபெய்ததால் நான் எரியல

மழையே மழையே ஏன் பெய்தாய்?

புல் வளர நான் பெய்தேன்“

என்ற விளையாட்டின் மூலம் சிறுவர்களுக்கு ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்வி கேட்கும் திறனும் அவற்றிற்குச் சரியான விடையைக் கூற வேண்டும் என்ற நோக்கில் சிந்தனை செய்யும் திறனும்

வளர்வதை அறிய முடிகிறது.

**விடலைப் பருவம்**

இப்பருவத்தில் தன் உணர்வுகளைப் புரிந்து, மற்றவர்களின் உணர்வுகளை அறிந்து ஏன்? எதற்கு? எப்படி? இவற்றைக் கையாள்வது என்ற முழுப் புரிதலும் அடங்கியுள்ள விடலைப் பருவத்தினர் தன் உணர்வுகளைக் கையாள்வதில், தெரிவிப்பதில் தடுமாற்றம் ஏற்படுவதும் உண்டு. எந்தப் பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டும் என்றாலும் உடல், உணர்வு, உறவு என்ற மூன்றும் சாதகமாக அமைதல் வேண்டும். அவை மேம்பட விளையாட்டுகள் துணைபுரிகின்றன.

“ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கல் ஆற்றுமால்
எழுமையும் ஏமாப்பு உடைத்து” (குறள் 206)

என்னும் குறளில் ஒருவன் ஆமை போல் தீயவை நேரும் பொழுது தன் ஓட்டினுள் அடக்கி ஆளத் தெரிந்தால் ஏழு பிறவியிலும் அதற்கான பலன் கிடைக்கும் என்பர். சிறுவர் விளையாடக்கூடிய “மெல்ல வந்து கிள்ளிப்போ என்னும் விளையாட்டில்

“மாதுளம் பழமே மெல்ல வந்து கிள்ளிப்போ
மாதுளம் பழமே மெல்ல வந்து கிள்ளிப்போ
சிரிக்காதே பேசாதே தலை ஆட்டாதே
கால் ஆட்டாதே கை ஆட்டாதே“

எனக் கூறிக்கொண்டு விளையாடுவர். இத்தகைய விளையாட்டுகள் மூலம் குழந்தைகள் தேவையற்ற இடங்களில் பேசாமல் இருப்பதும், மன அமைதியின் முக்கியத்துவமும் பிற்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அதைச் சரிசெய்ய முடியும் என்ற மன தைரியத்தையும் கொடுக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் குழந்தைகள் பலவிதமான மன உளைச்சலுக்கு ஆட்படுகின்றனர் என்பதை அறிந்த அரசாங்கம் அவர்களுக்கு யோகா போன்ற மன அமைதியை ஏற்படுத்தக் கூடிய கலைகளை கற்றுக் கொடுக்கின்றது. ஆனால் அக்காலத்திலோ சிறுவர்கள் விளையாட்டின் மூலமே அவற்றைக் கற்றுக் கொண்டுள்ளனர் என்பதை பாடல் வழி அறிய முடிகிறது. மற்றவர்கள் பேசும் போது அவர் சொல்வதை இறுதிவரை பொறுமையுடன் கேட்டுக்கொள்வது, விட்டுக் கொடுத்தல் இவை இருந்தால் அவர்கள் எமோஷனல் இன்டெலிஜென்ஸ் உள்ளவராகக் கருதப்படுகிறது என்னும் நற்பழக்கம் ஏற்பட விளையாட்டு உறுதுணையாக அமைகிறது.

தற்போது தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக மாணவர்களிடையே விளையாடும் பழக்கம் அருகி வருவதைக் காண முடிகிறது. வாழ்க்கையைப் பற்றிப் புரிந்து கொள்ள முக்கிய இடமாக விளையாட்டு மைதானம் அமைந்ததை அக்காலச் சிறுவர்களிடம் உள்ள நல்லொழுக்கங்கள் மூலமாக அறிய முடிகிறது. வளரும் குழந்தைகளுக்கு விளையாட்டு மைதானம் ஒத்துழைப்பு, புரிதல், சமத்துவம், மனஉறுதி, சகிப்புத்தன்மை அறவழி ஆகியவற்றைக் கற்பிக்கும் ஒரு குருகுலமாக விளையாட்டு அமைகிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**முடிவுகள்**

- நாட்டுப்புறவியலில் சிறார் வழக்கார்கள் சிறந்த இடம் வகிக்கின்றன.
- சிறார் வழக்காரிகளின் வழி சிறார் உளவியலைக் கண்டறிய முடிகிறது.
- சிறாரின் மகிழ்ச்சி, அமைதி, மனநிறைவு போன்ற உணர்வுகளுக்கு வழக்காறுகள் வடிகாலாக அமைகின்றன.
- விட்டுக்கொடுத்தல், தன்முனைப்பு, இணக்கம் ஆகிய மனநிலைகள் விளையாட்டின் மூலம்

நிறைவேற்றப்படுகின்றன என்பன இவ்வாய்வின் முடிவாகக் கண்டறியப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. உளவியல்,மேல்நிலை – முதலாம் ஆண்டு,தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,சென்னை, முதற்பதிப்பு-1978,ப – 2.
2. Ross Vasta, Marshall M Haith, Scott A Miller, Child Psychology The modern science Third Edition, John Wiley & Sons. INC Newyork, Pages:7-9, ISBN: 0-471-1922-X. குழந்தை **உளவியல் முன்னோடிகள்,விக்கிப்பிடியா**
3. Ross Vasta, Marshall M Haith, Scott A Miller, Child Psychology The modern science Third Edition, John Wiley & Sons. INC Newyork, Pages: 18 ISBN: 0-471-1922-X. குழந்தை **உளவியல் முன்னோடிகள்,விக்கிப்பிடியா**
4. நாட்டுப்புறச் சிறார் வழக்காறுகள், முனைவர் அ. சுகந்தி அன்னத்தாய், காவ்யா பதிப்பகம், **சென்னை,முதற்பதிப்பு-2019.**
5. திருக்குறள், பரிமேலழகர் உரை.